ஆலை அரசர் டாட்டாவுக்கு அள்ளித்தருகின்றனர்

Phone No 4503 Regd. No. M. 5458
விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (21—4—50) வெளியூர் (22—4—50) [இதழ் 231

10 கோடி!

அவதிப்படும் சென்னைக்கு 6 கோடி கடன் மறுக்கப்படுகிறது

அரிசி இல்லாத் தொல்லை இங்கே ஆளவந்தாரின் ஆர்ப்பாட்டம் அங்கே

வடக்கு — தெற்கு வேற்றுமைக்கோர் எடுத்துக்காட்டு

இந்திய முதலாளிகள் வரிசையில், முதலில் நிற்கும் தோழர் டாட்டாவுக்கு பத்து கோடி ரூபாய்கடன்கொடுக்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம். 10 கோடி ரூபாய், பணம் இல்லை என்று பரதவிக்கிறோம் என்று சர்க்கார் கூறும் இந்த நேரத்தில், 10 கோடி ரூபாய் ஒரு முதலாளிக்குக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. பணத்தோடு தான் பணம் போய் சேரும் என்று முதலாளிகள், நாடுகளில் கூறும் பழமொழி முற்றிலும் உண்மை. நூறு கோடி ரூபாய் சொத்துள்ளவர் தோழர் டாட்டா. அதனுடன் 10 கோடி ரூபாய் சேருகிறது!

டாட்டா, இரும்பு எஃகு தொழிற்சாலையை விரிவுபடுத்த இப்பெரிய தொகை கொடுக்கப்படுகிறதாம். தொழிலை வளர்க்கிறோம் என்று முதலாளிகள் அரசாங்கத்திடமிருந்து கடனாகப் பெரும் தொகையை எவ்வளவு தவறான வழிகளில் உபயோகித்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள். சொல்லித் தீராது வனஸ்பதி தொழிற்சாலைக்காகப் பத்து லட்ச ரூபாய் கடன் வாங்கினான், வட்டிக்குக் கொடுத்துப் பிழைக்கிறான் என்று ஒரு பக்கத்தில் குற்றச்சாட்டு! நெசவாலை அமைப்பதாகக் கடன் வாங்கினான், நிலம் கூட இன்னும் வாங்கவில்லை என்று எங்கும் பேச்சாக இருக்கிறது.

நாட்டுக்கு அவசியமான தொழில்களை, இயந்திரசாலைகளை தேசியமயமாக்கவேண்டுமென்று, திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எல்லா இடதுசாரிக் கட்சியினரும் கூறி வந்துள்ளனர்— அதே போல் தான் கூறினர் காங்கிரஸ்காரர் பதவிக்கு வருமுன்பு. ஆட்சி பீடத்தில் ஏறியபின் ஆணவம் அவர்கள் கண்ணை மறைத்து விட்டது. அத்துடன் முதலாளிகளின் தாசானுதாசர்களாக ஆகிவிட்டார்கள் ‘முதலாளிகளே, பயப்படாதீர்கள், தொழில்களை தேசியமயமாக்க மாட்டோம்’’ என்று கூறி பயந்துகொண்டிருந்தவர்களுக்கும், பலம் தந்தார்கள். பேச்சளவில் மட்டுமல்ல, இன்று செயலளவிலும் காட்ட முன் வந்திருக்கின்றனர்

“தொழிற்சாலைகள் நடத்துவதில் அரசாங்கத்தைவிடத் தொழில் முதலாளிகளே வல்லவர்கள். ஆகையால் மந்திரிகளுக்கு அவர்கள் பாடம் கற்பிக்க முன்வரவேண்டும்’’ என்று ஆணவத்தோடுதோழர் ஜி. டி. பிர்லா கூறுகிறார். ஆட்சி நடத்தவே எங்களுக்குத் தெரியவில்லையே, ஆலைகளை எங்கே நடத்தப்போகிறோம்: நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை’ என்று கூறும் வகையில், தோல்வியை ஒப்புக்கொள்ளும் வகையில், காங்கிரஸ் சர்க்கார் நடந்துகொண்டிருக்கிறது. டாட்டா எஃகு தொழிற்சாலை — நாட்டிலேயே முக்கியமான ஒரு ஆலை, அதை ஆட்சியாளர் அன்றே அரசாங்கமயமாக்கி இருக்க வேண்டும்! அவ்வாறு செய்யாததோடு, 10 கோடி ரூபாய் அதன் முதலாளிக்குக் கடன் கொடுக்கிறது!!

6 கோடி மக்களைக் கொண்டது 50 கோடி ரூபாய் வருட வருமானமுள்ளது சென்னை மாகாணம். நதிகளுக்குக்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

அயல்நாட்டு பணிமனை முன் இதாலிய மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

—(0)—

அமெரிக்கா — பிரிட்டிஷ் போக்கிற்குக் கண்டனம்

ரோம், ஏப். 20—

சுமார் 1000 மாணவர்கள் ‘டிரீஸ்டே’ ‘டிரீஸ்டே’ என்று ஒலித்துக்கொண்டே இதாலிய அயல்நாட்டு காரியாலயம்முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனுல் இரண்டு மணி நேரம் போக்குவரத்தே பாதிக்கப்பட்டுவிட்டது யூகோவின் சுதந்திரப்பிரதேசத்தில் சென்ற ஞாயிறன்று நடைபெற்ற தேர்தலை ஆட்சேபித்தே, இவர்கள் ஆர்ப்பாட்டம்செய்ததாகத் தெரிகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தினர் பின்னர் அமெரிக்க தூதுவர் பணிமனை முன்பும், யூகோ லிகேஷன் முன்பும் கூட ஆரம்பித்தனர்.

டிரீஸ்டே விஷயமாக பிரிட்டிஷ் அமெரிக்க கான்ஸல்கள் இதாலியை ஆதரிக்கவில்லை என்பதே அந்தப் பணிமனைகள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியதற்குக் காரணம் என்று தெரிகிறது.

சென்ற 48 மணி நேரத்தில் இதாலி—யூகோவின் உறவு மோசமாகிவருவதாகவும் கூறப்படுகிறது. இதாலிய சர்க்கார் நிலைமையைக் கவனித்துவருகின்றனர்.

டிரீஸ்டேயிலுள்ள இதாலியர்கள் தேர்தலின் பாத்திரலேயே டிட்டோவுக்கு வோட் செய்திருப்பதாக இங்கு கூறப்படுகிறது.

தோழர் நத்தானியல் ராஜினுமா

திருவனந்தபுரம், ஏப். 20—

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் நத்தானியல், தம் பதவியை ராஜினுமா செய்துவிட்டார் கட்சியில் பிளவு ஏற்பட்டதே இந்த ராஜினுமாவுக்குக் காரணம் என்று, கருதப்படுகிறது

கண்கட்டும் வித்தை பற்றிய இரகசியங்கள்

லண்டன், ஏப். 20—

சில நூற்றுண்டுகளாகவே பரம ரகசியமாக இருந்துவரும் கண்கட்டி வித்தையைப்பற்றிய விவரங்கள் அடங்கிய 10 புத்தகங்கள், டாம் ஹாரிஸ் என்கிற மந்திரவாதியிடம் இருக்கிறதாம் ஒரு பெண்ணை இரண்டாக ரம்பத்தினுல் அறுப்பது 500 ஆண்டுகாலமாக ரகசியமாக இருந்துவரும் கண்கட்டிவித்தை என்று அதில் கூறப்பட்டிருக்கிறதாம்.

கல்கத்தாவில் காலரா

கடந்த வாரத்தில் காலரா வியாதியால் 274 பேர் கல்கத்தாவில் உயிரிழந்தனர், கடந்த 14 ஆண்டுகளாக இதுபோன்று நடந்ததே இல்லை.

பாவ்டேவ் படைகளுக்கு அமெரிக்க உதவி

—(0)—

யு. எஸ். பிரெஞ்சு அபிப்பிராய பேதம்

லண்டன், ஏப். 20—

பாவ்டேயின் படைகளுக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ் அளிக்கும் ஆயுத உதவியை எப்படி அளிப்பது என்ற விஷயமாக யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும், பிரான்சுக்குமிடையே அபிப்பிராய பேதம் இருப்பதாகவும், இவ்விஷயம் அடுத்த மாதம் நடைபெறும் மூவல்லரசுக் கூட்டத்தில் விவாதித்து முடிவுசெய்யப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்கா பாவ்டேபடைகளுக்கு நேரிடையாகவே தளவாட உதவியைச் செய்யவே அமெரிக்கா விரும்புகிறது ஆனுல் பிரான்ஸ் தன் மூலமே பாவ்டே படைகளுக்கு ஆயுத உதவி கிடைக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

இந்தோ சீனவில் நிலைமை ஆபத்தாக இருக்கிறதென்பதை யுனைடெட் ஸ்டேட்ஸும், பிரான்சும் அறிந்திருப்பதால், இவ்விஷயமாக ஒரு சமரச ஏற்பாடு சீக்கிரமே ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யு. எஸ். தூதுவர் பணிமனை மீது வெடிகுண்டு வீச்சு

கெய்ரோ, ஏப். 20—

சிரியாவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் தூதவர் பணிமனை கட்டிடம் மீது எவனே ஒருவன் வெடிகுண்டு வீசியதாக டமஸ்கஸ் செய்தி ஒன்று கூறுகிறது.

இதனுல், அந்தத் தூதவர் பணிமனைக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், அங்கிருந்த டெலிபோன் கம்பங்கள் சேதமடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

வெடிகுண்டு வெடித்தவுடன் ஒருவன் ஓடியது தெரிந்ததும், அவனைத் துரத்திப் போலீஸார் சுட்டனர். ஆனுல் இருட்டில் அவன் எப்படியோ தப்பிச் சென்றுவிட்டான். சிரிய பாதுகாப்பு போலீஸ் அதிகாரி சம்பவத்திற்கு விஜயம் செய்து புலன் விசாரணை நடத்திவருகிறார்.

செஞ்சீனுவில் திருமண சீர்திருத்தம்

—(0)—

பொருந்தா மணங்கள் ஒழிகின்றன பதிவு மணம் இடம்பெறுகிறது

ஹாங்ஹாங், ஏப். 20—

செஞ்சீனுவில் இளமைவிவாகம் பலதார மணம், வைப்பு வைத்துக் கொள்வது முதலியவைகளைத் தடை செய்து சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

இருதரப்பினரும் பரஸ்பர சம்மதத்தின் பேரில் விவாகரத்து செய்து கொள்ளவும், கலியாணமான பின்பு பெண்கள் தன் சொந்தப் பெயரையே வைத்துக்கொள்ளவும், விதவைகள் மறுமணம் செய்துகொள்ளவும், ஆனால் எல்லாத் திருமணமும் பதிவு செய்யப்பட்டேயாகவேண்டும் என்றும் அச்சட்டத்தில் ஷரத்துகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மலான் சர்க்கார் பணிந்தது

சில பிரதேசங்களுக்குள் சுதேசி வெள்ளையர் வருவதாக இருந்தால், பாஸ் வைத்துக்கொள்ள வேண்டும் என்று தென்னுப்பிரிக்க சர்க்கார் உத்திரவிடுவதாக இருந்தது என்றும், ஆனுல் சுதேசிகளிடமிருந்து வந்த எதிர்ப்பைக் கண்டு, அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டதாகவும் தென்னுப்பிரிக்க மந்திரி ஜ ன்லைன் தெரிவித்தார்.

கான்பெர்ரா, ஏப். 20—

ஆஸ்திரேலியா தன் இறக்குமதி கட்டுப்பாடு நிலைமையைத் தளர்த்தி விருப்பதின் மூலம் இந்தியாவுக்கு சில நன்மைகள் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது. இந்தியாவிலிருந்து சருக்கு ஐவுளி வரவழைக்க இனி லைசென்ஸ் வேண்டியதில்லையாம்.

அமைதியை விரும்புவோர் இப்படிச் செய்யலாமா?

—(0)—

‘கார்டியன்’ ஓலம்

லண்டன், ஏப் 20—

பால்டிக்கில் சமீபத்தில் ரஷ்யா — யு. எஸ். விமானத் தகராறு பற்றியும், பிரிட்டிஷ் கப்பல்களைத் தடுக்க கடலில் கண்ணிகளை ரஷ்யாவின் கைப்பொம்மையான ஆல்பேனியா போட்டது பற்றியும் மாஞ்செஸ்டர் கார்டியன் குறிப்பிட்டு “உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று விரும்புபவர்கள், ஒருக்காலும் இம்மாதிரி நடந்து கொள்ளமாட்டார்கள்” என்று எழுதியிருக்கிறது.

‘பார்க்ஷயார் போஸ்ட்’ பால்டிக் சம்பவம்பற்றி எழுதுகையில், மேற்கு நாடுகள் யுத்தம் ஏற்படுவதை விரும்பவில்லை என்றும், ஆனுல் ரஷ்யாவின் போக்கு ஒரு பெரும் ‘வெடி விபத்து’ ஏற்பட காரணமாகவே இருக்கப்போகிறது என்று எழுதியிருக்கிறது.

மாலை மணி

சென்னை 21—4—50 வெள்ளிக்கிழமை

ஏனோ இந்த ஓலம்!

கறையான் புற்றெடுக்கிறது, அதில் கருநாகம் குடியேறுகிறது! கறையான்புற்று பின்னர் பாம்புப் புற்று எனப் பெயர் பெறுகிறது. புற்றின் உரிமையைத் தனதாக்கிக் கொள்ள கடும் விஷத்தைக் கக்கவும், கொடுஞ்சீற்றம் சீறவும் கருநாகம் பின்வாங்குவதில்லை !

* * *

வேறோர் பிராணி தன் உடலில் சேர்த்துவைத்திருக்கும் இரத்தத்தை, அட்டை, தன்னால் முடிந்த மட்டும் உறிஞ்சி, தன் உடலைப் பெருக்கிக்கொள்ள அல்லும் பகலும் முயலுகிறது. வேற்றுப் பிராணியின் உடலில் ஒட்டிக்கொள்வதும், முடிந்த மட்டும் விடாப்பிடியாக உறிஞ்சி விடுவதும் அதன் பண்பு!

* * *

புலி, சிங்கம் போன்ற கொடிய விலங்குகளால், பெரும் போராட்டத்தினிடையே கொன்று வீழ்த்தப்பட்ட இரையை நயவஞ்சக நரி, அந்த வலிவுடைய விலங்குகளுக்குத் தெரியாமலோ, அல்லது அவைகள் போயின பிறகோ, தின்று தன் வயிற்றை நிரப்பிக்கொள்ளும்.

* * *

பாம்பு-அட்டை-நரி, இவைகளிடையே காணப்படும் பண்புகள், மிருக இனத்தில் மட்டும் காணப்படுபவையாக இல்லை மனித இனத்தைச் சார்ந்தோரிடத்தும் சில வேளைகளில் இருக்கக் காண்கிறோம். அப்படிப்பட்ட பண்புகளைச் சிலர் எப்பொழுதும் தங்களுடைய இயல்பாகக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், சில கூட்டத்தினருக்கு இயற்கையோடு அமைந்த பண்புகளாகவும் அவைகள் அமைந்துவிடுகின்றன. ஏனைய மக்கள் அப்படிப்பட்ட தன்மையரோடு பழகுங்கால் பாம்பு-அட்டை-நரி இவைகளிடத்தில் எவ்வித அச்சத்தோடு நடந்துகொள்கிறார்களோ, அவ்வித அச்சத்தோடு நடக்க வேண்டியவர்களாகிறார்கள்.

மனித சமுதாயத்தில் நடமாடும் 'பாம்புகள்' 'அட்டைகள்' 'நரிகள்' ஆகியவைகள் விஷயத்தில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருந்தால்தான் உயிர்வாழ இயலும். இல்லையானால் வாழ்வு பாலைவனமாக மாறிவிடும்; கறையான் புற்று பாம்புப் புற்று என்று மாறுவதைப்போல் மாறிவிடவும் கூடும்! இது உலகியல் வாழ்விலே, மக்கள் கண்டுணர்ந்து வாழவேண்டிய பொதுப்பண்பாகும்!

* * *

நம் நாட்டிலே பிறப்பின் காரணமாகக் கற்பிக்கப்பட்ட பேதங்களின் காரணமாக, சிலர் ஏகபோக உரிமைகளை அடையவும், பலர் உரிமைகள் பலவும் மறுக்கப்பட்டவர்களாக ஆகவும் ஆன நிலைமை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக—ஏறத்தாழ ஈராயிரமாண்டுகளாக இருந்து வருகிறது. இப்படி உரிமைகள் பறிபோகும் விதத்தில் கற்பிக்கப்பட்டபேதங்கள் சட்டமாகவும், சாஸ்திரமாகவும், சம்பிரதாயமாகவும், சமய நெறியாகவும் சூழ்ச்சிக்காரர்களால் ஆக்கப்பட்டுவிட்டதால் இந்நாட்டில் குறிப்பாகத் தென்னாட்டில் வாழும் பெரும்பாலோரான உழைக்கும் இனத்தைச் சேர்ந்தவர்கள், பாம்புக்கு இரையாகும் கறையான்கள் போலவும், அட்டைக்குப் பலியாகும் பிராணிகள் போலவும். நரிக்கு ஏமாந்து போகும் விலங்குகள் போலவும் வாழும்படியான நிலைமை ஏற்பட்டது. இந்த அநீதி சென்ற முப்பது ஆண்டுகளுக்கு முன்புவரை சரிசெய்யப்படாமலே இருந்து வந்தது

மனித நீதியில் அக்கரையுடை அறிஞர்கள் வீழ்ந்துபட்ட சமுதாயத்திற்கு அதன் வீழ்ச்சிக்குத் தகுந்த அளவு ஏற்றங்கொடுத்தால்தான், மக்களுள் சமத்துவம் ஏற்படும், இல்லையாயின் உயர் வகுப்பினர் ஏற்றங்கொண்டோராகவே இருப்பர், ஏனையோர் எலியாக, முயலாக வாழ்வோராக இருப்பர் என்று அறிந்து. வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை அமுலுக்குக் கொண்டுவந்தனர்.

அரசாங்க-கல்வி சலுகைகளை அத்துணையையும் நூற்றுக்கு மூன்று பேராக உள்ள சமூகத்தாரே அடைந்து வருகின்றனர். அந்தச் சலுகைகளைப் பிற வகுப்பினரும் தங்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்த நீதிக்கட்சியார். வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை ஏற்படுத்தினர் ஆதிக்க வகுப்பினர் சீறிக் கிளம்பினர்; விஷம் கக்கினர்; எனினும் ஆட்சிப்பீடத்தினரின் அகத்தில் அஞ்சாமை குடிகொண்டிருந்ததால் வகுப்புவாரிச் சட்டம் நிறைவேறியது.

வகுப்புவாரிச் சட்டத்தின் மூலம், வீழ்ந்துபட்டுக்கிடந்த பார்ப்பனரல்லாத சமூகம், எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல், அரசாங்க அலுவல்களைப் பெற்றுவிடவில்லை; விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே இடம் பெற்றனர். வகுப்புவாரிச் சட்டம் வருவதற்கு முன்பு எப்படி ஏகபோக உரிமைகளை ஆதிக்க வகுப்பினர் அனுபவித்து வந்தார்களோ, அதேபோல்தான் சட்டம் அமுலாக்கப்பட்ட பிறகும்கூட அனுபவித்து வந்தார்கள். காரணம், சட்டத்தை எந்த அளவுக்கு மறைமுகமாகச் செல்லாக் காசாக ஆக்க முடியுமோ, அந்த அளவுக்கு ஆக்கினர். ஆதிக்க வகுப்பினரே அரசாங்க அலுவல்களின் முக்கிய நிலைகளில் இருந்து வந்ததாலும், இன்றும் இருந்து வருவதாலும் வகுப்புவாரி உரிமைச் சட்டம் பொய்யாக்கப்பட்டது; பொய்யாக்கப்படுகிறது.

வகுப்புவாரி உரிமைச் சட்டம் மூலம், விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே வர முடிந்தது என்றாலும். அப்படி வந்தவர்கள் ஆதிக்க வகுப்பினரைக்காட்டிலும் தகுதியிலோ, திறமையிலோ எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல என்பதைக் காட்டிக் கொண்டதுமட்டுமல்லாமல், சில இடங்களில் மிஞ்சிய திறமையுடையவர்கள் தாங்கள் என்பதையும் நிலைநாட்டியிருக்கிறார்கள். நூற்றுக்கு நூறு வசதிகளையும் தாங்களே அனுபவித்து வந்த ஆதிக்க வகுப்பினர், ஒரு சில இடங்கள் பார்ப்பனரல்லாதார்க்குப் போகின்றன என்பதையே பொறுக்க முடியாதவர்களாகிவிட்டனர். பொறாமை எண்ணத்தால், எல்லாவற்றையும் தம் இனமே அனுபவிக்க வேண்டும் என்ற சுயநலத்தால், கொஞ்சத்துக்குக்கொஞ்சம் திராவிடப்பெருங்குடி மக்களுக்கு உதவியாக இருக்கும் வகுப்புவாரி உரிமைச் சட்டத்தை ஒழிக்க எங்கெங்கு, எப்போதெப்போது விஷம் கக்க முடியுமோ, அங்கெல்லாம், அப்போதைக்கப்போது விஷம் கக்கி வருகின்றனர் ஆதிக்க வகுப்பினர்

வகுப்புவாரிச் சட்டத்தின் மூலம், நீதியை நிலைக்கச் செய்ய சென்னை காங்கிரஸ் மந்திரிசபை கொஞ்சத்துக்குக் கொஞ்சம் அக்கரை காட்டுவதைக்கண்டு, ஆதிக்க வகுப்பினர் ஓலமிடத்தொடங்கியுள்ளனர்.

சேலம் பிராமண சேவா சங்கம். இப்பொழுது ஓலம் எழுப்பியுள்ளது, வகுப்புவாரிச் சட்டத்தை நீக்கிவிட சென்னை அரசாங்கத்துக்கு உத்திரவு இடும்படி இந்தியக் குடியரசுத் தலைவரைத் தபால் மூலம் கேட்டுக் கொண்டுள்ளதாம் பிராமண சேவா சங்கம். அது எழுப்பும் ஓலத்தில் எவ்வளவு கடு விஷமும், நயவஞ்சகமும், காணப்படுகின்றன என்பதைக் காணுங்கள்.

"30 வருடங்களுக்கு மேலாக சென்னை சர்க்கார் வகுப்புவாத விகிதாசார உத்திரவின் மூலம் சர்க்கார் உத்தியோகங்களிலும், கல்வி ஸ்தாபனங்களில் சேரவும் பிராமணர்களைக் கட்டுப்படுத்தியுள்ளனர். இதன் விளைவாக பிராமண சமூகத்தில், பெரும்பாலோர் தங்களுக்கோ, தங்கள்சமூகத்திற்கோ அரசாங்கத்திற்கோ சாத்யமான உத்தியோக சேவையோ கல்வியபிவிருத்தியடையவோ முடியாமல் போய்விட்டது" என்று கூறுகிறார் பிராமணசேவாசங்கக்காரியதரிசி 'ஐயோ பாவம்'! பிராமணர்களால் சேவைசெய்ய முடியாமற்போய்விட்டதாம் ! சேவை செய்யும் பண்பும், ஆற்றலும் அவர்களுக்கு மட்டுந்தான் இருக்க முடியும்—இருக்கவேண்டும் என்கிறார் போலும் ! அந்த சேவைசெய்யும் வாய்ப்பும், ஆற்றலும் அவ்வகுப்பினரல்லாதார்க்கு ஏற்படக்கூடாது போலும்! பிறவகுப்பினர் ஆற்றலிலோ, அறிவிலோ, திறனிலோ, எந்த விதத்தில் தகுதியில்லாமலிருக்கிறார்கள், அதை நிறைவுபடுத்த 'பிராமணர்கள்' தேவை என்கிறார் 'அய்யர்'! பார்ப்பனரல்லாதார்க்கு சந்தர்ப்பமளிக்கப்படவில்லை என்ற ஒரு குறையைத் தவிர, வேறு எதிலே குறைவுடையவர்களாகக் காணப்படுகிறார்கள் ?

இன்றைக்கும் 'பிராமணர்கள்' எங்கு 'சேவை'செய்யாமல் தவிக்கிறார்களாம், அதற்காகக் கதறுகிறார் காரியதரிசியார்! அரசாங்க அலுவல்களில்தானாகட்டும், கல்வித்துறையில்தானாகட்டும் இன்றைக்கும் நூற்றுக்கு எழுபது எண்பதுபேர்கள் 'அவர்களாக'த் தானே இருக்கிறார்கள்! இருந்தும் போதவில்லையாம்! என்ன பேராசையோ! இதற்கு உவமை எங்கு தேடிப்பிடிப்பதோ தெரியவில்லை! நூற்றுக்கு நூறுபேரும் "அவர்களாகவே" இல்லையே என்று அழுகிறார்போலும் ! அவர் கண்ணைத் துடையுங்கள், நீர் வற்றி, உயிர்விட்டுவிடப்போகிறார் !

மேலும் அவர்கக்கும் விஷயத்தைக் காணுங்கள்:—

"இந்த வகுப்புவாத உத்தரவு போர்வையின் கீழ் முன்னேற்றமுள்ள பிராமணரல்லாதார் (முதலியார், பிள்ளை, நாயுடு செட்டியார் போன்றவர்கள்) சர்க்கார் உத்தியோகங்களிலும் கல்வி ஸ்தாபனங்களிலும், கிட்டதட்ட ஏகபோக உரிமை அடையவழி ஏற்பட்டுவிட்டது"

என்று புலம்புகிறார் பிராமண சேவா சங்கக் காரியதரிசி. சர்க்கார் அலுவலகங்களிலும், பள்ளிகளிலும் ஏகபோக உரிமை ஆட்சி நடத்துபவர்கள் ஆதிக்க வகுப்பினரா அல்லது அல்லாதாரா? என்பதைநாட்டு மக்களே உணர்வார்களே ! எந்த இடத்தில் எடுத்துக்கொண்டாலும் நூற்றுக்கு எழுபதுக்குக் குறையாமலும்,சில இடங்களில் நூற்றுக்கு நூறும் ஆதிக்கவகுப்பினரே இருந்துவருகின்றனர் என்பதை 'அய்யர்' ஏனோ மறைக்க விரும்புகிறார்? மறைக்க விரும்புவதுமட்டுமல்லாமல் "முன்னேற்றமுள்ள பிராமணரல்லாதார் கிட்டதட்ட ஏகபோக உரிமை அடைய வழி ஏற்பட்டுவிட்டது" என்ற பச்சைப் பொய்யும் பயப்படாமல் கூறுகின்றார். எங்கே ஏற்பட்டது வழி? வழி ஏற்பட ஆதிக்க வகுப்பினர் எங்கே விடுகிறார்கள்? ஏகபோக உரிமை ஈராயிரமாண்டுகளாகத்தான் 'அவாள்' கையிலேயே இருந்து வரும்போது, ஏனோ அய்யர் அலறுகிறார்? ஒரு சில சலுகைகள்கூட பிறவகுப்பினர்க்குச் செல்லக் கூடாதா? எப்படிச் சொல்லவிடுவார்கள். அவர்கள்? 'பிராமணர்கள்' அல்லவா அவர்கள்? பேசுவது 'பிராமண சேவா சங்க' மல்லவா?

"பிராமணர்கள் ஒடுக்கப்பட்ட சமூகமாக ஏற்பட்டுள்ளனர்" என்கிறார் சேவா சங்க காரியதரிசி. ஒடுக்கப்பட்டுவிட்டார்களாமே! எவ்வளவு பெரிய பொய்யை எவ்வளவு சுலபமாக வெளியிட முடிகிறது. அவர்களால், பார்த்தீர்களா? அந்தத் 'திறமை' அவர்களுக்கல்லாது வேறு யாருக்கும் வராது! வரவே வராது! திருவல்லிக்கேணியை, மைலாப்பூரை. மாம்பலத்தைப் பார்த்தால் அவர்களை யாராவது ஒடுக்கப்பட்டவர்கள் என்று கூறுவார்களா ? சினிமா துறையை, பத்திரிகை அலுவலகத்தை, நடன சாலையை, காப்பி ஹோட்டலை கோயிலை, வியாபார நிலையங்களை, அலுவலகங்களைப் பார்த்தால், அவர்கள்ஒடுக்கப்பட்டவர்கள் என்று எந்த மூடனாவது சொல்ல முன் வருவானா ? என்னமோ அய்யர் சொல்கிறார்! என்ன காரணமோ. என்ன ஏற்பட்டதோ தெரியவில்லை ! என்றாலும்

'ஹரிஜனங்கள் போன்ற தாழ்த்தப்பட்ட மக்களும் அதிகச் சலுகைகள் பெற முடியவில்லை" என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார். அவர்களுக்கு அவர் சமூகம் இதுவரையில் இழைத்து வந்தக் கொடுமைகளை மறந்து, மறைத்துப் பேசுகிறார் !

பிராமண சேவா சங்கம் ஏதேதோ பிதற்றுகிறது! ஏனோ இந்த ஓலம்! திராவிடப் பெருங்குடி மக்கள் ஏமாந்திருக்கும் வரையில், பிதற்றல்கள் வெற்றிப் பெறத்தானே செய்யும்—பெற்றுத்தானே வந்திருக்கின்றனர் ! திராவிட மக்கள் விழிப்புற்றெழப்போகிறார்களா அல்லதுஏமாந்து போகப்போகிறார்களா என்பது நீதி நெறியுணர்வு கேட்கும் கேள்வியாகும்!

இனி நடப்பவை

திருவல்லிக்கேணி:— வ. உ. சி நகர் கழக மன்றத்தின் சார்பில், 23—4—50 அன்று மாலை 'வ. உ. சி. யார்' என்பதைப் பற்றித் தோழர் டி. ஏ. துரை அவர்கள் தலைமையில் பல தோழர்கள் பேசுவர்.

* * *

சைதாப்பேட்டை:— 23-4-50 காலை 9-மணிக்கு இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

* * *

கோவை:— 23—4—50 காலை 10-மணிக்கு நகர தி. மு. கழகக் கட்டிடத்தில், "திராவிடன் பாராளும் மன்றம்" கூடும். மன்ற உறுப்பினர்கள் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

சென்னை, ஓட்டேரி:— 23-4-50 ஞாயிறு காலை 9-மணிக்கு தி. மு. க. சார்பில் தலைவர் வே. த. அர்ச்சுனன் அவர்களால் குறள் வகுப்பு நடைபெறும். இடம்: 21, பிரிக்லின் ரோட் ஓட்டேரி சென்னை-12.

* * *

கணியூர்:—23—4—50 ஞாயிற்றுக்கிழமை காலை 7-மணியளவில் தி. மு. க. சார்பாக அஞ்சாநெஞ்சன் அழகிரி நாள் கொண்டாடப்படும். தோழர் எம். உதுமான் அவர்கள், தலைமை தாங்குவார். தோழர்கள்: தில்லைவில்லாளன், இரா. இளம்வழுதி, தேவகர்-இளஞ்சேரன், சி. வி. ஆறுமுகம் ஆகியோர் பேசுவர்.

* * *

தாளங்குப்பம்:—21-4-50 வெள்ளி மாலை 4-30 மணிக்கு டிகுப்பத்தில் நடைபெறும். தோழர் என். ஜீவரத்தினம் எம். சி. தலைமை வகிப்பார், தோழர் பி. வி. செரியன் டை சங்கத்தைத் திறந்துவைப்பார். தோழர் கே. வி. குட்புராஜ் கொடியேற்றிவைப்பார். தோழர்கள் எல். ராமச்சந்திரன், க. அன்பழகன், என். ஆர். சாண்டோ, வி. முனுசாமி, லோகநாதன், பி. ரங்கநாதன், என். சண்முகனார், தோழியர் என். கிருஷ்ணாபாய் முதலியோர் மீன்பிடிப்போர் சமூக குறைகள் என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

இராசிபுரம்:— இராமலிங்கம் படிப்பகம் ஆரம்பவிழா, 23-4-50 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-மணிக்கு நடைபெறும். விழாவிற்குத் தோழர் திருக்குறள் முனுசாமி பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் என். மீனாட்சிசுந்தரமுதலியார் பி. ஏ. எல். டி. அவர்கள் திறந்துவைப்பார்.

மதப் பேய்பிடித்து மடியாதீர்!

—(ே)—

வீண் விவாதம் கூடாதென சிரியாவில் தடை உத்தரவு

டமாஸ்கஸ், ஏப். 20—

ஸிரியா சர்க்காரின் மதம் எதுவாகஇருக்கவேண்டும்என் கிறவிஷயமாகஸிரியாஅரசியல் நிர்ணயசபை முடிவுசெய்யும் வரை, அவ்விஷயமாக பொது விவாதம் எதுவும் நடைபெறக் கூடாது என்றுதடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது

ஸிரியா தயாரித்துள்ள நகல் திட்டத்தில், இஸ்லாம்தான் ஸிரியாவின் மதம் என்று சிபார்சு செய்யப்பட்டிருக் கிறது.

பழைய அரசியல் திட்டத்தில் இதுபற்றி திட்டமாக எதுவும் கூறப்படாவிட்டாலும், தலைவர் மூஸ்லிமாகவே இருக்கவேண்டும்என்று கூறப்பட்டிருந்தது.

இந்து மதம் விஷயமாக பொதுவிவாதங்களோப் ஆர்ப்பாட்டங்களோ ஏதாகிலும் நடைபெற்றால், அவை தீவிரமாக அடக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

———

வட அட்லாண்டிக் நாடுகளுக்கு கனடாவின்யோசனை

ஆட்டவா, ஏப். 20—

ரஷ்யாவின் நோக்கம் நிறைவேறுமல் தடுக்க வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளிடையே பொருளாதாரத் துறையிலும் ஒத்துழைப்பு வேண்டும் என்பதை கனடா மே 15ல் லண்டனில் கூடும் அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் கௌன்சிலில் அறிவிக்கும் எனத்தெரிகிறது.

அரசியல் சமூக பொருளாதாரத் துறையில் இந்நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு அவசியம் என்றும், மார்ஷல் உதவித் திட்டம் முடிவடைந்ததும், பொருளாதார பரஸ்பர உதவி திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்றும் கனடா அயல் நாட்டிலாகா மந்திரி தோழர் பியர்ஸன் கூறுகிறார்.

அவர் கூறும் யோசனைகளாவன,- 1. இந்த நாடுகளிடையே உற்பத்தி அதிகரிக்கவேண்டும்.

2. வியாபாரம் தடையின்றி நடைபெறவேண்டும்,

வாழ்க்கைத்தரம் உயர வழி செய்யப்படவேண்டும்,

4. அபிவிருத்தியடையாத பிரதேசங்களுக்கு விசேஷஉதவி அளிக்கப்படவேண்டும்.

வட அட்லாண்டிக் பெடரேஷனின் மத்யக்கௌன்ஸிலொன்று ஏற்படுத்த வேண்டும்.

———

மந்திரவாதிக் குழுவில் ஒரு பெண்

லண்டன், ஏப். 20—

சாதாரணமாக மந்திரவாதிக் கோஷ்டியில் பெண்கள் மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை என்றாலும் மிஸ்மாவிஸ் பெய்ர்ட் என்ற பெண் மட்டும் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

சீட்டுக்கட்டுகளைவைத்துக்கொண்டு தந்திர ஜாலங்கள் செய்வதில் இவர் நிபுணராம்.

கொரோவிற்குச் செல்லும் மந்திரவாதிக் கோஷ்டியினருடன் இவரும் செல்கிறார்.

நேரு-லியாகத் ஒப்பந்தம் பற்றி பட்டேல்

லண்டன், ஏப். 20 —

நேரு-லியாகத் ஒப்பந்தம் வெற்றிகரமாக அமுல் நடத்தப்படுகிறதா, இல்லையா என்பது இன்னும் 6 வாரங்களில் தெரிந்துவிடும் என்று இந்தியாவின் உதவி பிரதமர் சர்தார் பட்டேல் 'மான்செஸ்டர் கார்டியன்' கல்கத்தா நிருபரிடம் கூறியிருக்கிறார்.

இந்த உடன்படிக்கை வெற்றி பெற கிழக்கு வங்காளத்திலிருந்து 1948 ம் வருஷ ஆரம்பத்திலிருந்தே வெளியேறிவந்த ஹிந்து அகதிகள் திரும்பிச் செல்ல சம்மதிக்க வேண்டும் என்றார், ஆனால் பாகிஸ்தான் ஹிந்துக்கள் விஷயமாக தங்கள் கொள்கை என்ன என்பதைத் தெளிவு படுத்தும் வரையில் அவர்கள் மனதில் தைரியம் ஏற்பட வழியில்லை என்றும் அவர் கூறினார்.

உடன்படிக்கைக்கு கையெழுத்தான முதல் பாகிஸ்தான் மந்திரி சபையின் ஸ்வரமே மாறியிருக்கிறதைக் கண்டேன், மகிழ்ச்சியடைவதாகவும் இரு நாடுகளின் உறவு பலப்படுவதற்கேற்ப இரு நாடுகளின் போலீஸ்தாரும் உதவும் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்துள்ள ஹிந்துக்கள் மனதில், பூரண நம்பிக்கை ஏற்படுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்றும், வர்த்தகத் தகராறு, இரா அபிப்பிராய பேத விஷயங்கள் இவைகளிலும் இரு நாடுகளிடையே சமரசம் ஏற்படுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் சர்தார் பட்டேல் கூறியிருக்கிறார்.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

———

தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

கள்ளிக்கோட்டை (மலையாளம்)
தென் கோவை
பவானி.
கோபி.
வடசேரி.
மேலச்சின்னனம்பட்டி.
செல்வபுரம்.
சன்னசி நல்லூர்.
கச்சமங்கலம்
வந்தவாசி
திட்டக்குடி

மற்றைய கழகம்

வேளாள தேனாம்பேட்டை
(தமிழ் இளைஞர் கழகம்)

ஆலை அரசர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறுக்கே பாலம் கட்ட வேண்டும்; நாட்டை வளமுறச் செய்யவேண்டும்; 6 கோடி ரூபாய் கடன் கொடுங்கள்" என்று மத்திய சர்க்காரை சென்னை சர்க்கார் கடன் கேட்டது. கொடுப்பதுபோல்சிறிது நாள் பாவனை காட்டி, 'பணம் இல்லை, நிறுத்திவையுங்கள் திட்டங்களை' என்று பதில் கிடைத்தது. அதனால் ஏற்பட்ட கொதிப்புகூட அடங்கவில்லை, சென்னை வட்டாரங்களில். உண்மையில் பணம் இல்லைபோலிருக்கிறது என்று நிதிமந்திரிகோபால்ரெட்டிஒருவாறு ஆறுதல் அடைந்திருக்கக்கூடும். ஆனால் இன்று நாம் கேள்விப்படுவதென்ன? ஒரு தனிப்பட்ட முதலாளிக்கு 10 கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் கடன்தரப்போகிறது வெட்கப்பட வேண்டாமா கோபால் ரெட்டி? வேதனைப்படவேண்டாமா சென்னை சர்க்கார்? வடநாட்டு முதலாளி ஒருவருக்குக்கொடுத்த மதிப்புகூட தென்னாட்டு சென்னை சர்க்காருக்குக் கொடுக்கப்படவில்லையே! பஞ்சத்தால்வாடும் சென்னை மக்களை.வஞ்சம்தீர்க்கும்வகையில் அரிசிக்குக் கொள்ளை விலை கோறும் வடநாடு, நாட்டை வளமாக்கிக் கொள்ளவும் கடன் தர மறுக்கிறது. ஆனால் அவர்கள் நாட்டில், ஒரு இரும்புத் தொழிற்சாலையை விரிவுபடுத்தவேண்டும் பணம்அட்டியில்லாமல் அள்ளி தரப்படுகிறது.

முதலாளி - தொழிலாளி பிரச்சினை போன்றுதான், வடநாடு-தென்னாடு பிரச்சினையும் முக்கியமானது. இதை நாம் என்றே உணர்ந்த காரணத்தால் மக்களுக்கு எடுத்துக் கூறி வந்துள்ளோம். குறுகிய மனம்படைத்தவர்கள் பிரிவினைப் பித்து பிடித்தினைக் கொண்டவர்கள் (அதாவது ஆங்கிலத்தில் Provincialism என்று கூறுவார்கள்) என்று கூறி, நம்மை ஏளனம் செய்து, இகழ்ந்து பேசிய காங்கிரஸ் தோழர்கள் உணர்வார்களா?

———

வெற்றிலை போடுவோருக்கு!

கடைக்காரர் கைது: மூவர் மரணம்

இந்தூர், ஏப். 18—

அஜ்மீரில் உள்ள ஆந்தாசில் பாம்புவிஷம்தீண்டியவெற்றிலையை உபயோகித்ததினால்,மூவர் உடனே மரணமடைந்தனர். அதே கடையில் வெற்றிலை வாங்கிய நாலாவது நபர் தக்க சமயத்தில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று உயிர் தப்பினார். கடையிலிருந்த வெற்றிலை பூராவும் போலீஸார் சோதனை போட்டதில் பாம்பு விஷம்தீண்டியதாகக் கண்டுபிடித்தனர். கடைக்காரர் கைது செய்யப்பட்டார்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

23 - 4 - 50

கோவில்பாளையம்:—என். வி. நடராசன்.

பொன்னம்மாப்பேட்டை (சேலம்):—ஜி. பி. சோமசுந்தரம், அண்ணாத்துரை, அன்பழகன், ஆசைத்தம்பி, சித்தையன்

கனியூர்:—திலலைவில்லாளன், இரா. இளம்வழுதி, தேவநகர் இளஞ்சேரன், சி. வி. ஆறுமுகம்.

24 - 4 - 50

மேட்டூர் (சேலம்):—க. அன்பழகன், சித்தையன்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ. அ. பை.
முன்வரவு		894 - 11—0
ஏ. எம். கான்,	இலங்கை	5—0—0
பா. சா. வே பெத்தண்ணன்,	காரைக்குடி	10—0—0
இராம. சுப்பையா	,,	10- 0—0
சி. நடராஜன் அண்டு பிரதர்	,,	3—0—0
எம். ஏ. ஞானசேகரபாண்டியன்	,,	3-0—0
எஸ். எம். இபுராஹீம்	,,	2—0—0
மு சி. த. அண்ணாமலை	,,	2—0-0
மா சண்முகம்	,,	2-0-0
ரெகுநாதன்	,,	2—0—0
அ. ச. நடராசன்	,,	2—0—0
சு. முத்துகாமாட்சிபாண்டியன்	,,	2—0 0
அருணாசலம்	,,	2-0-0
அ. சு பு	,,	2—0-0
கந்தசாமி	,,	1—0—0
கோபாலகிருஷ்ணன்	,,	1—0 0
ரு. இராமசாமி	,,	1-0—0
அ. மீனாட்சிசுந்தரம்	,,	1-0—0
ஏ. ஏ. எம் என் அண்டு சன்ஸ்	,,	1-0—0
மு. காதர்பாட்சா	,,	1—0—0
கே. வெங்கட்டன்	,,	1—0-0
ச. காளியப்பன்	,,	1—0—0
இரா. கிருஷ்ணன்	,,	1—0—0
ச. தங்கவேலு		1 0—0
க அண்ணாமலை	,,	1—0-0
ரா. சின்னசாமி	,,	1 0-0
கெ. குருசாமி	,,	1—0- 0
பாலசந்திரன்	,,	1—0-0
த. வ. ப, இராஜு	,,	1—0-0
சே. சுப்பையா	,,	1—0—0
எஸ். சாமிக்கண்ணு	,,	1-0—0
த. வெள்ளச்சாமி	,,	1—0 - 0
ஆர். நரசிம்மன்	,,	1—0-0
ஆ. சுப்பையா	,,	1—0—0
அ. ரு. அ. ந. அண்டு கோ	,,	1-0—0
சி. முரு. ந. இராமசாமி	,,	1-0-0
த. மாரியப்பன்	,,	0-8—0
எஸ். சண்முகசுந்தரம்	,,	0—8—0
ஏ. சண்முகம்	,,	0—8—0
ஏ. வீரய்யா	,,	0—8—0
தி. மு. க —தளவாய்புரம் கிளை		10—0-0
புலவர் ஆர். எஸ். இராமன்,	சென்னை	2—0-0
ஏ எஸ். அண்ணாமலை,	அருப்புக்கோட்டை	10 - 0—0
ஏ. பி. செழியன்,	அருப்புக்கோட்டை	25-0-0
எஸ். டி. எம். இராஜன்,	காத்தான்குளம்	1—0-0
ஆர். நாகம்மாள்,	கோவை	15—0-0
ஆர். பழனிசாமி,	,,	1—0—0
கந்தசாமி,	,,	1—0—0
கே. பழனியப்பன்,	,,	1—0-0
பாட்சா,	,,	1—0-0
சே ரசன்,	,,	1-0—0
எம். கிருஷ்ணன்.	,,	5—0—0
தி. மு. க.—நாகமநாய்க்கன்பட்டி கிளை		10—0—0
தி மு. வாலிபர் கழகம்,	கோபி	10—0-0
டி. பி. சி. பாலுசாமி,	துறையூர்	5—0—0
பி. எஸ். அமிர்தம்,	,,	5—0—0
டி. பி. அழகமுத்து.	,,	5—0—0
பி. எஸ். முனுசாமி,	,,	1—0—0
ப. சி. பாலசுந்தரம்,	,,	1—0—0
போ. சு. கந்தசாமி,	,,	1—0—0
மாதவதாஸ்,	,,	1—0—0
அ. ஆசிர்வாதம்,	கோலார் தங்கவயல்	3—0—0
தி. மு. க, புதுப்பாளையம் (சேலம்) கிளை		10 -0—0
இ. வி. கோபால்,	சென்னை	1—0-0
ஜி கலியபெருமாள்,	குடந்தை	1—0-0
எஸ். தர்மலிங்கம்,	,,	1 0—0
சோமசுந்தரம்,	சைதாப்பேட்டை	0-7—0
கதிர்வேலு,	,,	0-9—0
மா. ப. மாரிமுத்து,	போடிநாயக்கனூர்	10- 0-0
ந பு. பரமானந்தம்,	,,	1—0-0
ஏ. ஏ. பரமசிவம்,	,,	2 -0—0
அ. மல்லையன்,	,,	0-8—0
டைலர் ஆர். எஸ் வாசு,	,,	0—8—0
து. அழகுரத்தினம்,	திருவொற்றியூர்	2—0—0
கே. வன்னிராஜன்,	சேலம்	5—0—0
		1115—11 0

அழகிரி நினைவு நாள்

சுண்டக்காமுத்தூர்

சு. முத்தூர், ஏப். 14—

இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம், தோழர் சு. க. பெருமாள் தலைமையில்கூடி, அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி நினைவுநாள் கொண்டாடப்பட்டது. அழகிரிசாமி ஆற்றிய தொண்டு பற்றியும், அவரது வறுமையைப் பற்றியும் சு. வி. பழனிசாமி, சு. கு. தாண்டவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கடைசியாக அழகிரிசாமிக்கு மரியாதை செலுத்தும்முகத்தான், எல்லோரும் இரண்டு நிமிஷம் எழுந்து நின்று வீர வணக்கம் செலுத்தினர். முடிவாக நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

திருவல்லிக்கேணி

சென்னை, ஏப். 13—

தி. மு. கழகத்தின் சார்பில் 2—4—50 ஞாயிறு காலை இவ்வூர் கானுயாக் இரண்டாவது தெருவில் தோழர் சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில், மறைந்தமாவீரன் அழகிரி நினைவுநாள் நடைபெற்றது. அதுபோது தோழர் வேலப்பன் திராவிடநாட்டுப் பண்பாட தோழர் என். சம்பந்தன் அவர்கள் அழகிரி நினைவு பாடல் இசைக்க தோழர் நீலநாராயணன் அவர்கள் 'இருவண்ணக் கொடி'யின் கீழ் யாவரும் அழகிரியாகவேண்டும். பகுத்தறிவு பணிபுரியவேண்டும் என்று கூறி, கழகக் கொடியை ஏற்றுவித்தார். பின் தோழர்கள் விக்கிரமசிம்மன், வரதராசன், பாஷியம், ராமு, கணேசன், அறிஞர் அப்பாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

ஆரணி

ஆரணி, ஏப். 10—

பகுத்தறிவு இலவசப் படிப்பகத்தின் சார்பில், 8—3—50 மாலை 6 தருமராஜா கோவில் மைதானத்தில் "அஞ்சாநெஞ்சன் அழகிரி நினைவுநாள்" அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இசைக்கத் தோழர்களால் இன்னிசை இசைக்கப்பட்டு தோழர் "இராவணன்" அவர்கள், அழகிரியைப் பற்றிய பாடல்களைப் பாடினர். தோழர் சி. வி. குப்புசாமி அவர்கள் தலைமையில் கூட்டம் துவக்கப்பட்டது. கூட்டத்து வக்கத்தில் அழகிரியின் வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகள், அச்சடிக்கப்பட்டவை மக்களுக்கு வழங்கப்பட்டது. தலைவர் தன் முன்னுரையில் அழகிரியின் அஞ்சா நெஞ்சத்தையும், அழகான கருத்தமைந்த பேச்சையும், விளக்கி கூறி பல "அழகிரிகள்" நாட்டுக்குத் தேவை எனக் கூறினர்

தோழர் மா. இளஞ்செழியன், அவர்கள், அழகிரியின். அரும்பெரும் தொண்டினைப்பற்றிப் பேசினர்.

தோழர் சின்னண்ணன் அவர்களால், டாக்டர் அம்பேத்கார் அவர்களால் கொண்டுவரப்பட்ட "இந்து மத சீர்திருத்த சட்டத்தை" ஆதரித்து ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அதை ஆதரித்துத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் விளக்கமாகப் பேசினர்.

பிறகு தோழர் சி. வி. குப்புசாமி அவர்கள் தன் பின்னுரை கூறினர். தோழர் சின்னண்ணன் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்து மத சீர்திருத்த சட்ட மசோதா. பலத்த கைதட்டல் மூலம் மக்களால் வரவேற்கப்பட்டு நிறைவேறியது.

பிறகு ப. இ. படிப்பகத்தின் சார்பில் தோழர் அ. ப. நடராசன் அவர்களால் நன்றி கூறப்பட்டு, கூட்டம் இனிதே முடிவுற்றது.

அய்வநல்லூர்

அய்வநல்லூர், ஏப். 17—

16—4—50 காலை தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் ஜி. காத்தையன் அவர்கள் தலைமையில் மாவீரன் அழகிரி நினைவு நாளைக் கொண்டாடியது. அதுபோது, அழகிரிசாமி படிப்பகம் ஒன்று ஏற்படுத்தி, அதற்குக் கட்டிடம் கட்ட, நோட்டீஸ் அடித்துப் பொதுமக்களிடம் வசூல் செய்வதென செயலாளர் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. முடிவில் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

திருவண்ணாமலை

திருவண்ணாமலை, ஏப். 16—

2—4—50 மாலை 6 30 இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தோழர் பாலகிருட்டினன் தலைமையில் அஞ்சா நெஞ்சன் அழகிரி நினைவு நாள் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் தோழர்கள் அண்ணாமலை, சண்முகம் ஆகியோர் அழகிரி அழிந்ததற்கு, நாட்டுத் தொண்டே காரணமென்றும், அவர் வாழ்வை, மக்களுக்காக வேகிறைத்தாரென்றும், பேச்சில் குறிப்பிட்டனர் தலைவர் முகவுரை கூறிய பின், நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

அரியலூர்

அரியலூர், ஏப். 15—

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், 9-4 50 அன்று மாலை தளபதி அழகிரிசாமி நினைவுநாள் பொதுக்கூட்டம் சிகச்சிறந்தமுறையில், தோழர் எம். ஆர். செல்லப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அவர்கள் அழகிரிசாமி இந்நாட்டிற்கு ஆற்றியிருக்கும் அரிய தொண்டினைக்குறித்து சுமார் 1 மணிநேரம் பேசினர். அடுத்துத் தோழர் டி. கே. சீனுவாசன் பலத்த கைதட்டலுக்கிடையே அரசியல், பொருளியல், சமுதாய இயல் குறித்து விரிவாக 2 மணிநேரம் பேசினர். ஏராளமான மாணவர்கள் குழுமியிருந்தனர். தலைவர் பின்னுரைக்குப்பின் தோழர் எ. ஆர். நாதன் அவர்கள் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

செந்துறை

செந்துறை, ஏப். 16—

8-4-50 மாலை தோழர் இராஜமாணிக்கம் அவர்கள் தலைமையில் தி. மு. க. துவக்கவிழாவும், அழகிரி நாளும் வெகு விமரிசையாக நடைபெற்றது. தெருக்கள்தோறும் வரவேற்பு தோரணங்களாலும் கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கூட்டத்திற்குச் சுற்றுப்புறங்களிலிருந்து ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். தலைவர் அவர்கள் தமது முன்னுரையில், திராவிட முன்னேற்றக் கழக லட்சியங்களைக் குறித்துப்பேசினர். பின் கழகக் கொடியை மேலப்பழுவூர் கிளைக் கழகச் செயலாளர் தோழர் எம். ஆர். செல்லப்பா ஏற்றிவைத்து கொடியின் தத்துவத்தை விளக்கினர். அடுத்துத் தோழர் சாமி அழகிரிசாமியின் வீர செயல்களை விவரித்துப் பேசுகையில், நாமெல்லாம் எண்ணற்ற அழகிரிகள்போல் முன்தோன்றவேண்டுமென்று குறிப்பிட்டார். பின் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அவர்கள் அரசியல், பொருளியல்பற்றி சுமார் 1 மணிநேரம் பேசினர். அடுத்துத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரை கூற அடுத்த சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் அரங்கசாமி அவர்கள்நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

பிரிட்டிஷ் கைத்தொழில் கண்காட்சி

லண்டன், ஏப். 19—

மே 8-ந் தேதி லண்டனிலும், பர்மிங்காமிலும் நடக்கவிருக்கும் பிரிட்டிஷ் கைத்தொழில் கண்காட்சியில் இடவசதியின்மையால், ஒரு சிறு இந்திய யூனிட்டை ஏற்பாடு செய்தவே இந்தியா ஹவுஸ் உத்தேசித்திருக்கிறது. இந்த இந்திய சாமான்களைப் பற்றி சகல விவரங்களும் கிடைக்கும் சாமான்கள் வேண்டுவோர் இந்தியா ஹவுசுக்கு வந்து அவைகளை வாங்கிக்கொள்ளவேண்டும்.

யூகோவில் சீர்திருத்தம்

லண்டன், ஏப். 18 —

யூகோவில் உள்நாட்டுச் சீர்திருத்தம் சில செய்யப்பட்டுவருகின்றன. காமின் பார்முடன் ஏற்பட்ட தகராறிலிருந்து மேனாட்டினர் யூகோவில் மிகவும் செளஜன்யமாக நடந்துகொண்டு வருகின்றனர் என்றும், யூகோ வாசிகளின் மனப் பூர்வமான ஆதரவு டிட்டோவுக்கு இருந்துவருகிறதென்றும்,விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

விவசாயிகளிடையே அதிக உணவுப் பொருள் இருந்தும் அதற்கான தக்கவிலை கிடைக்கவில்லையே என அவர்கள் குறைபடுகிறார்கள்.

சோஷலிஸ்டு ஜன நாயகத்தை ஏற்படுத்த டிட்டோ முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

காமின்பாரம் நாடுகளில் போலீஸ் படை

அதிகரித்து வருகிறதாம்

லண்டன், ஏப். 19—

ரஷ்ய ஆதிக்கமுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பாதுகாப்புப் போலீஸ் படைகள் அதிகரிக்கப்பட்டிருப்பதிலிருந்து, அங்கு பாதுகாப்பு, பற்றிய பீதி ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஹங்கேரியின் பாதுகாப்புப்படையில் 70,000 பேர்களும் ஜெகோஸ்லாவியா பாதுகாப்புப் படையில் 100,000 பேர்களும் இருக்கின்றனராம்,

இந்தியாவில்!

சிங்கப்பூர், ஏப். 19—

பொதுவாக செல்வமுள்ளவர்களுக்குத் தான் செல்வாக்கு என்று உலகில் இருந்துவரும் வழக்கம் என்றாலும், எல்லா நாடுகளிலும் அப்படியில்லை என்று புரபஸர் தோழர் டி. எச். லிங்காக் மக்கள் கல்விச் சங்கத்தில் பேசுகையில் கூறினர்.

இந்தியாவில் அரசியல் தலைவர்களுக்கும்,ஆத்மிக தலைவர்களுக்குமே செல்வாக்கு அதிகம் என்றும், சீனாவில் நன்கு படித்தவர்களுக்கும்,ஓவியர்களுக்குமே செல்வாக்கு அதிகம் என்றும், மலேயாவில்கூட கொஞ்சம் நன்கு படித்தவர்களுக்கும், பரம்பரைச் செல்வந்தர்களுக்குமே செல்வாக்கு அதிகம் என்றும் அவர் கூறினர்.

மூடப் பழக்கங்களுக்கு தடை

சிங்கப்பூர், ஏப். 19—

அலகு குத்திக்கொள்வது என்ற வழக்கத்தை யாரும் அனுஷ்டிக்கக்கூடாது என்று, சிங்கப்பூரிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் ஒரு தடையை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

இதே போல் தீமிதித்தல், சதையைப் பிய்த்துக்கொள்ளல் போன்ற பிரார்த்தனைகளுக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது (ஞானம்)

சேலம் பொன்னம்மாபேட்டை தி. மு. க. கிளை

— கட்டிடத் திறப்பு விழா —

அன்புடையீர்! நாளது 23—4—50 ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு பொன்னம்மாபேட்டை மல்லி செட்டித் தெருவில் அமைந்துள்ள 'அழகிரி பந்தலில்' டை கட்டிடத் திறப்புவிழா, நிகழ்ச்சிமுறையில் கண்டபடி நடைபெறும், தாங்கள்வருகைதந்து சிறப்பிக்கவேண்டுகிறோம்.

தலைவர்:- G. P. சோமசுந்தரம் அவர்கள்

கொடியேற்றல்:-க. அன்பழகன் M. A சென்னை

அழகிரி படத் திறப்பு:-A. V. P. ஆசைத்தம்பி

கட்டிடத் திறப்பு;—

தோழர் C. N. அண்ணாதுரை M. A.

மாலை 6-மணிக்கு விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில்

தோழர் A. சித்தய்யன் தலைமையில்

பொதுக்கூட்டம் நடைபெறும்.

பெண்களுக்குத் தனி இடம் உண்டு. ஒலிபெருக்கி உண்டு.

அனைவரும் திரண்டு வருக!

திராவிட முன்னேற்றக் கழகம் பொன்னம்மாபேட்டை கிளை.

ஜெர்மனியில் நியூஸ்பிரிண்ட் பஞ்சம்

பெர்லின், ஏப். 19—

ஜெர்மனியில் நியூஸ்பிரிண்ட் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதென்றும், ஆகவே 20 பக்கங்கள் பிரசுரிக்கும் பத்திரிகைகள் பக்கங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் கூறப்படுகிறது.

நியூஸ் பிரிண்ட் சப்ளை செய்யும் யுனைடெட்ஸ்டேட்ஸுடனும், கனடாவுடனும் நடக்கும் பேச்சுவார்த்தைகள் முறிந்துவிடலாம் என்றும், கைவசமுள்ள ஸ்டாக்குகள் குறைந்து வருகின்றனவென்றும் கூறப்படுகிறது.

டிட்டோ மீது பல்கேரியா குற்றச்சாட்டு

வியன்னா ஏப், 19—

பல்கேரிய சர்க்காரைக் கவிழ்க்க மார்ஷல் டிட்டோ சதி செய்வதாக புகார் கூறி, பல்கேரிய சர்க்கார் யூகோ சர்க்காருக்கு ஒரு கண்டனக் குறிப்பை அனுப்பியிருக்கிறது. மார்ஷல் கரோஷிலாவையும், இதர பல்கேரிய மந்திரிகளையும் கொல்ல நடந்த சதியில் யூகோ தலைவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்றும் அக்குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது

சைகோனில் வேலை நிறுத்தம்

லண்டன், ஏப். 20—

பாவ்டேயின் கிர்வாகத்தை எதிர்த்து, சைகோனில் பொது வேலை நிறுத்தம் ஏற்பட்டிருப்பதாக செய்தி கிடைத்திருக்கிறது.

இந்த ஸ்டிரைக் வியட்மினியர்களால் தூண்டப்பட்டிருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

கோ. தி. மா. மு. கழக செயற்குழு அவசரக் கூட்ட அமைப்பு

கோ. மா. தி மு. க. செயற்குழுவின் அவசரக் கூட்டம் 23—4—50 ஞாயிறு காலை 10 மணிக்கு, கோவை நகர கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டிற்கு வரவேற்புக் கமிட்டி அமைக்கவும், இன்னும் மிக முக்கியமான விஷயங்களைப் பற்றி முடிவு செய்யவும், செயற்குழு உறுப்பினர்கள் தவறாமல் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

வணக்கம்
பி. பழனிச்சாமி
செயலாளர்

அறிவிப்பு

ரெஜின மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

G. பழனியப்ப முதலியார், மதுரை.

ஆசிரியருக்கு முடங்கல்

அதிகாரிகள் போக்கு!

ஐயா!

பேரன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு இராசாமடம் திராவிட முன்னேற்றக்கழகத்தார் வணக்கமாய் வரைந்த இதழ்:—

இவ்வூர் உயர்தரப்பள்ளியின் ஆண்டுவிழா 14—4—50 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தோழர் வி. நாடிமுத்துப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் சத்திரம் சூப்பரிண்டெண்ட் அவர்களும் மற்ற சத்திரம் அதிகாரிகளும் வந்திருந்தார்கள். விழாமுடிந்ததும் தலைவர் ஊருக்குச்சென்றுவிட்டார். அதன் பிறகு சத்திரம் சூப்பரிண்டெண்ட் (அய்யர்) தாசில்தார். (அய்யர்) இவ்வூர் ஆர். வி. விஸ்வநாதசாஸ்திரி, மகிழங்கோட்டைக் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ. கனகேச தேவர், கிராமமுன்சீப் விஸ்வநாத்தேவர் மற்றும் இவ்வூர் வாசிகளும் சத்திரத்தில் உட்கார்ந்து கொண்டு நம் இயக்கத்தோழர்களின் பெயரை பதிவு செய்துகொண்டும் அவர்களது பெற்றோர்களை கூப்பிட்டு உன்மகன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சந்தாதாரியாக இருக்கிறானா கூட்டங்களுக்குச் செல்லுகிறானா என்று மிரட்டி விசாரித்ததும்,உங்களுடையபிள்ளைகளை தி. மு. கழக கூட்டங்களுக்கு போகாமல் தடை செய்யாவிட்டால் கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் என்று ரிப்போர்ட் செய்து உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தண்டிக்கச் செய்வோம் என்றும் கருப்புச்சட்டைகள் இவ்வூரில் இருக்கக்கூடாதென்றும் மிரட்டினார்கள்,

15—4—50
இராசாமடம் } தி மு. கழகத்தார்

கிருஷ்ணமேனன் விருந்தளிக்கிறார்

லண்டன், ஏப். 20 —

கபூர்தலா மகாராஜாவுக்கு இந்திய ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ணமேனன் ஒரு விருந்து நடத்தினர். இதற்கு லார்ட் பெதிக்லாரென்ஸ், சர்தார் தஹ்லுவாலியா முதலியவர்கள் வந்திருந்தனர்.

விமானம் மூலம் நேற்று தோழர் கிருஷ்ணமேனன் டில்லியிலிருந்து விலகும் தென்னாப்பிரிக்க ஹைகமிஷனர் லெவிபுக்கு ஒரு விருந்தளித்தார்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street Madras-1.